தமிழ்நாடு அரசு [பதிவு எண்.
2025

# தென்காசி மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

தென்காசி, டிசம்பர் 31, 2025 [எண். 38
மார்கழி 16, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு-2056

## மாவட்ட ஆட்சியர் இறுதி அறிவிக்கை

ந.க.எண்.COLRD/3077/2017-A4 30-12-2025

**தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 12 கிராம ஊராட்சிகளை தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்தல்**

அரசாணை (நிலை) எண், 299, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2(1)) துறை, நாள்-17.11.2025 இன்படி (1) தென்காசி மாவட்ட ஊரக வளரச்சி அலகு, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 12 கிராம ஊராட்சிகளை தூத்துக்குடி மாவட்ட ஊரக வளரச்சி அலகு, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்து செயல்படும் என தெரிவித்து தென்காசி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட உள்ளூர் வட்டார பகுதியில் குடியிருந்து வருகின்ற யாரிடமிருந்தும் உரிய காலக்கெடுவிற்குள் எவ்வித ஆட்சேபனைகள் வரப்பெறவில்லை.

எனவே, தென்காசி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 12 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பதவிகளுக்கான பதவிக்காலம் முடிவுற்ற பின்னர் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படும் என இறுதி அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

| வ. எ ண். | அரசாணை (நிலை) எண் 213 வருவாய் (வநி.1(1)) துறை நாள்-15.04.2008 இன்படி தூத்துக்குடி மாவட்டத்துடன் இணைக்கப்பட்ட உள்வட்டம்/வருவாய் கிராமங்கள் | | அரசாணை (நிலை) எண், 299, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2(1)) துறை, நாள்-17.11.2025-இன் படி தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றியத்துடன் சேர்க்கப்படும் கிராம ஊராட்சிகள் |
|---|---|---|---|
| 1 | இளையரசனேந்தல் | பிச்சைதலைவன்பட்டி | பிச்சைதலைவன்பட்டி |
| 2 | | அப்பனேரி | அப்பனேரி |
| 3 | | வடக்குப்பட்டி | வடக்குப்பட்டி |
| 4 | | நக்கலமுத்தன்பட்டி | நக்கலமுத்தன்பட்டி |
| 5 | | பிள்ளையார்நத்தம் | பிள்ளையார்நத்தம் |
| 6 | | அய்யனேரி | அய்யனேரி |
| 7 | | சித்திரம்பட்டி | சித்திரம்பட்டி |
| 8 | | புளியங்குளம் | புளியங்குளம் |
| 9 | | இளையரசனேந்தல் லெட்சுமியம்மாள்புரம் | இளையரசனேந்தல் |
| 10 | | இளையரசனேந்தல் | வெங்கடாச்சலபுரம் |
| 11 | | முக்கூட்டுமலை | முக்கூட்டுமலை (முக்கூட்டுமலை மற்றும் கஸ்தூரிரங்கபுரம் கிராமங்கள்) |
| 12 | கழுகுமலை | ஜமீன் தேவர்குளம் | ஜமீன் தேவர்குளம் |

இடம் :தென்காசி

நாள் : 31.12.2025

திரு. ஏ.கே. கமல் கிஷோர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர்மற்றும்
ஊராட்சிகளின் ஆய்வாளர்
தென்காசிமாவட்டம்.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.

தமிழ்நாடு அரசு
2025

[பதிவு எண்.

# தென்காசி மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

தென்காசி, டிசம்பர் 31, 2025
மார்கழி 16, விசுவாவசு, திருவள்ளுவர் ஆண்டு-2056

[எண். 36

## மாவட்ட ஆட்சியர் இறுதி அறிவிக்கை

ந.க.எண்.COLRD/3077/2017-A4, நாள்.30.12.2025

தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் முக்கூட்டு மலை கிராம ஊராட்சியினை இரண்டாகப் பிரித்து, நடுவப்பட்டி எனும் புதிய கிராம ஊராட்சியாக அறிவித்து தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்தல்

அரசாணை (நிலை) எண், 299, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ப.ரா.2(1)) துறை, நாள்-17.11.2025 இன்படி தென்காசி மாவட்ட ஊரக வளரச்சி அலகு, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் முக்கூட்டுமலை கிராம ஊராட்சியை இரண்டாகப் பிரித்து நடுவப்பட்டி மற்றும் ஸ்ரீரெங்கராஜபுரம் குக்கிராங்களை உள்ளடக்கிய நடுவப்பட்டி எனும் தனி கிராம ஊராட்சியாக அறிவித்து, தென்காசி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைத்து செயல்படும் எனவும் தெரிவித்து வெளியிடப்பட்டுள்ள முடிவுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உள்ளூர் வட்டார பகுதியில் குடியிருந்து வருகின்ற யாரிடமிருந்தும் உரிய காலக்கெடுவிற்குள் எவ்வித ஆட்சேபனைகள் வரப்பெறாததாலும், தென்காசி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள அறிவிக்கை மீதும் எவ்வித ஆட்சேபனை கடிதங்களும் வரப்பெறாத காரணத்தினாலும் தென்காசி

மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் நடுவப்பட்டி மற்றும் ஸ்ரீரெங்கராஜபுரம் குக்கிராமங்களை உள்ளடக்கிய நடுவப்பட்டி எனும் தனி கிராம ஊராட்சியாக தோற்றுவித்து தென்காசி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊரக உள்ளாட்சி பதவிகளுக்கான பதவிக்காலம் முடிவுற்ற பின்னர் குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்துடன் இணைந்து நடைமுறைப்படுத்தப்பட்டு செயல்படும் என இறுதி அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இடம் :தென்காசி

நாள் : 31.12.2025

திரு. ஏ.கே. கமல் கிஷோர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
ஊராட்சிகளின் ஆய்வாளர்
தென்காசி மாவட்டம்.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் மதுரை அரசு கிளை அச்சகத்தில்
அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.